# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம

## செயலாற்றுகை அறிக்கை ஆண்டு – 2015







# நோக்கக்கூற்று

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கி இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலை தொழிற்படுத்தல்

# பணிக்கூற்று

இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலின் தரச்சிறப்பு, போதியளவு மேம்பாடு ஆகியனவற்றை நோக்கி சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல், இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிதி உதவி, விவசாய உள்ளீடுகள், பரந்த சேவை அத்துடன் இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்தி.

# இலக்கு

- இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- இறப்பர் பயிர்ச்செய்கை நில அளவை அதிகரித்தல்.
- பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் ஊடாக கிராம மட்டத்தில் வறுமையை குறைத்தல்.
- முடிவுப் பொருள் உற்பத்தியை ஊக்குவித்தல் மூலம் தொழில் வாய்ப்பினை அதிகரித்தலும் அந்நியச் செலாவணி ஈட்டுலை அதிகரித்தல்.

# முன்னுரை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இறப்பர் காணி தொகைமதிப்பீட்டில் கிடைத்த தகவலின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் காணி பயிர்ச்செய்கையின் நில அளவு 136582 ஹெக்டெயர் ஆகும். அந் நிலப்பரப்பில 87604 ஹெக்டெயர் சிறு இறப்பர் தோட்ட பிரிவுக்கும், 48978 ஹெக்டெயர் தோட்டக் கம்பனிக்கும் சொந்தமானது. வருடாந்த மொத்த இறப்பர் உற்பத்தி 88567 மெற்றிக்தொன் ஆவதோடு இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 10% குறைவினைக் காட்டுகின்றது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 50% சீட் இறப்பர் ஆவதோடு, 29% இறப்பர் பால் உற்பத்தி, 13% கிரேப் இறப்பர் உற்பத்திக்கும் 8% புளோக் இறப்பர் உற்பத்திக்கும் ஒதுக்கப்பட்டது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 12% ஏற்றுமதி செய்துள்ளதோடு 88% உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக நுகர்வு செய்யப்பட்டிருந்தது. பாக்கிஸ்தான், இந்தியா, ஜேர்மனி, மலேசியா மற்றும் யப்பான், ஆகியன இலங்கையின் பச்சை இறப்பரை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகளாவதோடு அந்நாடுகள் கொள்வனவு செய்த இறப்பரின் அளவு மொத்த ஏற்றமதி அள7வில் 63% ஆகும். 2015 ஆம் ஆண்டில் சீட் இறப்பர் கிலோவொன்றின் 1 சராசரி விலை 245.93 ரூபாயாவதோடு அது முன்னைய வருடத்தை விட 14% விலை வீழ்ச்சியாகும்.

அரசின் தலையீட்டின் பிரகாரம் இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சியை நோக்கி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இறப்பர் உற்பத்தியின் முன்னேற்றத்திற்கு அநேகமாக உதவியாக அமைந்துள்ளன. 2015 ஆம் ஆண்டுக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 3691.15 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு 3194.26 மில்லியன் ரூபாய் செலவை ஏற்றுள்ளதோடு 87% சதவீதம் ஆகின்றது. அரச நாற்றுமேடைகளில் ஆண்டின் கன்று உற்பத்தி 1.11 மில்லியன் ஆனதோடு விநியோக அளவு 1.39 மில்லியன் கன்றுகளாகும்.

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொணராகலை, பதுளை அம்பாந்தோட்டை, அவ்வாறே அம்பாறை, பிரதேசங்களுக்கு புதிய இறப்பர் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு 2011 ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2015 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

ஆர். பீ. பிரேமதாச்
பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# நன்றி

2015 ஆம் ஆண்டு திறைசேரியிடமிருந்து பெற்றுத்தரப்பட்ட நிதி அனைத்தையும் முறையான வகையில் செலவிடுவதற்கு இயன்ற மிகவும் சிறப்பான வருடமாகும்.. இந்நிதி முதலீடு செய்வதில் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்தல், மனித வள மேம்பாடு, பௌதிக வள அபிவிருத்தி செய்தல், மனிதவள மேம்பாடு, பௌதிக வள அபிவிருத்தி, அதிக பங்களிப்பு மற்றும் ஈடுபாடு, தொழிலாளர் திருப்தி ஆகிய விடயங்களில் தற்கால வரலாற்றில் உயர்மட்டத்தை அடைந்துள்ளோம். இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

ஆர். பீ. பிரேமதாச
பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# பொருளடக்கம்


1. அறிமுகம் 1

1.1 வரலாற்றுப் பின்னணி 1-2

1.2 இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள் 2-3

1.3 இறப்பர் அபிவிருத்தி திணைக்கம் 3-4

1.4 திணைக்களத்தினது நிறுவன அமைப்பு 5

1.5 ஒழுங்கமைப்பு இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 6

1.6 திணைக்களத்தினது ஆளணித் தகவல்கள் 7

2. 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை முன்னேற்றம் 8

2.1 இறப்பர் பயிர் மானிய நிகழ்ச்சித்திட்டம் 8

2.2 பயிர் உற்பத்தி 9

2.3 மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 9

2.4 ஊடுபயிர்ச்செய்கை நிகழ்ச்சத்திட்டம் 9

2.5 பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 10

2.6 பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்செய்கை 11

3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள 2015 12

3.1 இறப்பர் பயிர்நில விஸ்தீரணம் 12

3.2 உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு 13-15

3.3 உள்நாட்டு இறப்பர் நுகர்வு 16

3.4 மூலப்பொருளாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி 16-18

3.5 இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 19-20

3.6 இறப்பர் விலை 20-21

3.7 இறப்பர் வியாபாரிகள் 22

3.8 இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை 22-23

3.9 புதிய பயிரிடல் உள்ளடஙங்களாக இறப்பர் பயிரிடலின் முன்னேற்றம 23-28

3.10 மானியம் வழங்குதல் 29

3.11 இறப்பர்பயிர் நாற்றுமேடைகள், கன்று விநியோகம் 29-31

3.12 ஊடுபயிர் பயிர்ச்செய்கை 32-33

3.13 மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல் 33-34

3.14 தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை 34
3.15 சர்வதேச நடவடிக்கை 35
3.16 சட்ட நடவடிக்கை 35-36
3.17 விஷேட அபிவிருத்தி நிகழச்சித்திட்டம் 36
3.18 இணைந்த நிதியம் 37
3.19 செஸ் வரவு, அறவிடல் முறைமைகள் 38-39
3.20 மீள் பயிர்ச்செய்கைக்கான ஆலோசனை சபை 39
3.21 உள்ளக கணக்காய்வு நடவடிக்கை 40
3.22 பிரச்சார பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விடயம் 41-42
3.23 கணனி பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விடயம் 42

4. பிரதேச செயலக முன்னேற்றம் 43
4.1 இறப்பர் புதிய பயிர்ச்செய்கை முன்னேற்றம் 43
4.2 இறப்பர் மீள் பயிர்ச்செய்கை முன்னேற்றம் 43
4.3 ஊடு பயிர் பயிரிடல் முன்னேற்றம் 44
4.4 மழைபாதுகாப்பு கவசத்தை பயன்படுத்தல் 44
4.5 இறப்பர் பால் வெட்டுபவர்களை பயிற்றுவித்தல் 45
4.6 இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான தொழில் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டம் 45
4.7 ஒட்டுவைப்பவர்களுக்கான பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டம் 46

5. ஏனைய நிறுவன சேவைகளை நிறைவேற்றுதல்

# 1. அறிமுகம்

மிக நீண்ட காலந்தொடக்கம் இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் பிரதான பொருளாதார பெருந்தோட்டப் பயிரான இறப்பர் பயிர், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தி மிக்க பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளது. முக்கியமாக இலங்கையின் பதினான்கு நிர்வாக மாவட்டங்களில் இறப்பர் பயிர்செய்கை பரம்பலடைந்துள்ளதோடு, தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் இறப்பர் பயிர்செய்கை அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டுள்ளது.

## 1.1. வரலாற்றுப் பின்னணி

இறப்பர் பயிர் ஹெவியா பிரயிசியலியன்சிஸ் (*Havea brasialiensis*) ஆகிய தாவரவியல் பெயரால் இனங்காணப்பட்டது. பிரேசிலில் மழைக்காடுகளில் இயற்கையாக வளர்ந்த இப்பயிர் பெற்றக்கொள்ளப்பட்ட இறப்பர் பால் இதுவரையில் முழு உலகிலேயே பெருந்தொகையான உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை இறப்பர் பொருளாக விளங்குகின்றது.

பிரித்தானிய காலானித்துவ ஆட்சி காலத்தில் அதாவது 1876 ம் ஆண்டு ‘‘ஹென்றி விக்ஹெம்’’ என்ற ஆங்கிலேயரால் முதன் முதலாக கம்பஹா ஹெனரத்கொட தாவரவியல் பூங்காவில் இறப்பர் கன்று நடப்பட்டதன் மூலம் இலங்கைக்கு இறப்பர் மரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு 07 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்ட இறப்பர் பயிர்ச்செய்கை தெற்காசியா முழுவதும் பரவலடைந்து இறப்பர் உற்பத்தியானது விரைவாக முன்நோக்கிச் சென்றது. அதற்கு முரனான வகையில் இறப்பர் விலை கீழ்நோக்கிச் சென்றதனால் விலையில் ஸ்தீரத்தன்மையை உருவாக்கும் நோக்கத்துடன் 1922ம் ஆண்டில் பிரித்தானியாவால் ‘‘ஸ்டீவன்ஸன் நடவடிக்கை முறை’’ அறிமுகம் செய்யப்பட்டது. பங்கு முறைமையிலான உற்பத்தி மற்றும் பயிர்நிலப் பகுதியை வரையறை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அந்த நடவடிக்கை முறைமைக்கு இறப்பர் செய்கையாளரினாலேயே ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக அது 1928ம் ஆண்டில் கைவிடப்பட்டது. அதேவேளை மீண்டும் இறப்பர் வழங்கல் அதிகரித்து விலை குறைவடைந்ததன் பின்னர் 1934ல் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய சகல நாடுகளினதும் இணக்கத்துடன் “International Rubber Regulation Agreement” என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஸ்டீவன்ஸன் நடைவடிக்கைக்கு சமமான வரையறைகளை உள்ளடக்கிய அவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இறப்பர் பயிரிடும் நாடுகளில் இறப்பர் நிர்வாகத்தின் பொருட்டு அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அதற்கிணங்க ‘‘1934 ஆம் ஆண்டு 06ம் இலக்க கட்டளைச் சட்டம்’’ மூலம் இறப்பர் நிர்வாகத் திணைக்களம் அமைக்கப்பட்டது. அத்திணைக்களத்தில் முதல் இறப்பர் நிர்வாகி திரு. பி. சரவனமுத்து ஆவார்.

இறப்பர் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக ‘‘1953ம் ஆண்டு 36 ம் இலக்கம் கொண்ட மீள் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டம்’’ நடைமுறைப்படுத்தப்பட்டது. இறப்பரினை மீண்டும் பயிரிடுவதற்கு வழிவகுக்கும் வகையில் ‘‘1934 ஆம் ஆண்டு 06 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டம்’’ மீள் திருத்தம் செய்யப்பட்டு ‘‘ 1956 ஆம் ஆண்டு 11ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்’ அனுமதித்துக் கொள்ளப்பட்டதோடு, அச்சட்டம் மற்றும் ‘‘ 1953ஆம் ஆண்டு

இலக்க 36ம் இலக்கம் கொண்ட மீண்டும் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டத்தின் கட்டளைக்கு ஏற்ப இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் வழி நடாத்தப்படுகின்றன.

இறப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டில் அதுவரை இயங்கிய இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு மாற்றீடாக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் அமைக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதுவரை காணப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக இறப்பர் பயிர்த்துறையின் அபிவிருத்திக்கு உறுதுணை புரிந்த கருத்திட்ட சேவைகள், கன்று உற்பத்தி மற்றும் உர விநியோகம் போன்றவை மிகவும் பரந்த அளவிலான விரிவான சேவைகளை வழங்குவதற்கு இறப்பர்த் திணைக்களத்தினால் இயன்றிருந்தது.

மேலும் இத்திணைக்களத்திற்கு, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமும், சிறுதோட்ட உரிமையாளருக்கு விற்பனை மற்றும் விஸ்த்தீரன சேவையை பெற்றுக்கொடுப்பதன் மூலம், துருசவிய நிதியத்தால் பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

## 1.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள்.

### 1.2.1. 1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் மானியச் சட்டம்

இச்சட்டத்தின் இறப்பரினை மீண்டும் பயிர் செய்தல், இறப்பரினை புதிதாக பயிரிடல், ஊடுபயிர் செய்கை, தொழிற்சாலைகளை புதுப்பித்தல் மற்றும் முறைமையான கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை அமுலாக்குதல். மேலும் இச்சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் செஸ் வரி விதிக்கப்பட்டுள்ளது.

1953ம் ஆண்டு 36 ம் இலக்க இறப்பர் மீள நடுகை நிதிச்சட்டத்தின் 7 வது பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி வரியினை அறிவிடுவதற்கு சட்டரீதியான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க வெளிநாடுகளுக்கு அனுப்பட்ட அனைத்து இறப்பர் இறாத்தலொன்றுக்கு 10 சதம் ஏற்றுமதி வரியாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.2. 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்

இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நாட்டிலுள்ள சகல சிறு இறப்பர் நிலையங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களின் பயிர்ச்செய்கை, உரிமையாளர்கள், காணியின் பரப்பு ஆகியவை உள்ளடங்கிய அடடவணையொன்றினை நடைமுறைப்படுத்திச் செல்வது இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் யாப்புரீதியான செயற்பாடாகும். இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கை இட
ம்பெறுகின்ற 10 ஏக்கருக்கும் அதிகமான (ஹெக்டயார் 4.04 ற்கும் அதிகமான) இறப்பர் பயிர் செய்கை “தோட்டம்” ஆகவும், 10 ஏக்கருக்கு குறைந்த (ஹெக்டயார் 4.04 ற்கும் குறைந்தது) இறப்பர் பயிர் செய்கை “சிறு காணியாகவும்” பொருள் கொள்ளப்படுகிறது.

### 1.2.3. 2006 ஆம் ஆண்டின் 20ம் இலக்க இறப்பர் மீள் பயிர்செய்கை மானியச் (திருத்தப்பட்டது) சட்டம்

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்க செஸ் வரிக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயற்கையான பச்சை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திக்கே செஸ் வரி அறவிடப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்கம் கொண்ட இயற்கை இறப்பருக்கான செஸ் வரிக் கட்டளை உள்ளடங்கிய 2007 ஆகஸ்ட் 30ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1518/18 உடைய அதிவிசேட வர்த்தமாணி பத்திரிகைக்கு இணங்க ஏற்றுமதிக்காக அல்லது தேசிய நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும், இயற்கை இறப்பர்

சார்ந்த உற்பத்திக்கு தேவையான பச்சை இறப்பர் கிலோகிராம் ஒன்றிற்கு 4/- ரூபா செஸ் வரி அறவிடுவதற்கு தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு, மேற்கூறிய செஸ் வரியினை அறவிட்டுக் கொள்வதற்கான நேரடி அதிகாரம் காணப்படுகின்றது.

## 1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனமான இத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 எனும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. தலைமைக் காரியாலயத்தினால் நிர்வாகம், ஒருங்கிணைப்பு, ஸெஸ் வரியினை ஒன்று சேர்த்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மானியங்களை செலுத்துதல், கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், உரத்தினை விநியோகித்தல் மற்றும் ஆலோசனை சேவைகள் முதலான இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் சேவைகள் மக்களுக்கு மிகவும் வினைத்திறனான முறையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளன. அதற்கிணங்க 05 பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் காரியாலயம்
   (மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்காக)

2. களுத்துறை பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (களுத்துறை மாவட்டத்திற்காக)

3. இரத்தினபுரி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்காக)

4. காலி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக)

5. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் காரியாலயம்
   (மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்க

மேலும் இறப்பர் பயிர் செய்கையின் பொருட்டு சிறந்த ஒட்டுமுறையிலான கன்று உற்பத்திக்காக அரசினால் 08 நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மீரிகம (கம்பஹா மாவட்டம்)
2. வெளிக்கடைமுள்ள (கம்பஹா மாவட்டம்)
3. ஏகல் ஓய (களுத்துறை மாவட்டம்)
4. குருகொடை (களுத்துறை மாவட்டம்)
5. கரப்பிஞ்சா (இரத்தினபுரி மாவட்டம்)

6. கும்புக்கன (மொனராகலை மாவட்டம்)
7. மித்தெனிய ( அம்பாந்தோட்டை மாவட்டம்)
8. பதியதலாவ (அம்பாறை மாவட்டம்)



குருகொடை இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை



மித்தெனிய இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை



குறுகொடை இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை

## 1.4. திணைக்களத்தின் நிறுவன அமைப்பு



## 1.5 ஒழுங்கமைப்பு இறப்பர் அபிவிருத்தி திணைக்களம



## 1.6. திணைக்களத்தின் பணிமனை விபரங்கள

| தொ.இ | பதவி | அனுமதிக்கப்பட்ட பணிமனை | தற்போதைய பணிமனை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம்- இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 02 | பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 2 | 1 | 1 |
| 03 | பிரதம கணக்காளர்-இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 04 | பிரதிப் பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே, உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 16 | 16 | - |
| 05 | உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 06 | கணக்காளர்- இலங்கை.நிர்.சே | 6 | 4 | 2 |
| 07 | பிரதி பணிப்பாளர்- | 1 | - | 1 |
| 08 | உதவி பணிப்பாளர் -தகவல் தொழிநுட்பம் | 2 | 1 | 1 |
| 09 | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| 10 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர்- | 2 | - | 2 |
| 11 | கணக்காய்வு உதவியாளர் | 1 | 1 | - |
| 12 | நிருவாக உதவியாளர் | 4 | 3 | 1 |
| 13 | பிரச்சார அலுவலர் | 1 | 1 | - |
| 14 | பாதீட்டு உதவியாளர் | 1 | 1 | - |
| 15 | அபிவிருத்தி அலுவலர் | 22 | } 23 | } 4 |
| 16 | அபிவிருத்தி உதவியாளர் | 5 | | |
| 17 | நாற்றுமேடை முகாமையாளர் | 7 | 6 | 1 |
| 18 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர்: விசேட (உயர்வகுப்பு) | 12 | - | 12 |
| 19 | கட்டிட பராமரிப்பு அலுவலர் | 1 | 1 | - |
| 20 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 139 | 114 | 25 |
| 21 | தகவல் தொடர்பாடல் தொழினுட்ப உதவியாளர் | 5 | 2 | 3 |
| 22 | எழுதுவினைஞர் | 12 | 12 | - |
| 23 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர் | 182 | 163 | 19 |
| 24 | அலுவலக ஊழியர் சேவை | 28 | 26 | 2 |
| 25 | சாரதி | 36 | 36 | - |
| 26 | லொறி உதவியாளர் | 8 | 7 | 1 |
| | | **497** | **422** | **75** |

# 2. செயலாற்றுகை முன்னேற்றம் - 2015

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தியை கருத்திட் கொண்டு இத்திணைக்களத்தினால் பின்வரும் குறிப்பிடக்கூடிய விடயங்களை மேற்கொள்ளப்பட்டது.

- இறப்பர் பயிர்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்
- கன்று உற்பத்தி
- மழைக்கவச பாவனை நிகழ்ச்சித்திட்டம்
- ஊடுபயிர் நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## 2.1. இறப்பர் பயிர் மானிய செயற்திட்டம்

புதிய இறப்பர் பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் சிறு தோட்டங்களுக்காக 2015 ஆம் ஆண்டில் 7170 ஹெக்டேயர் பரப்பு இலக்காக இருந்ததோடு அவற்றுள் 769 ஹெக்டேயர் பயிரிடப்பட்டன, இவ் 769 ஹெக்டேயர் பயிரிடுவதற்காக பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் சிறு தோட்டங்களுக்காக புதிய இறப்பர் பயிர்செய்கையின் பொருட்டு மானியமாக 189.83 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளன.

இறப்பர் மீள் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களின் பொருட்டு 2145 ஹெக்டேயர் இலக்காக இருந்ததோடு 614 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 1700 ஹெக்டயார் பரப்பு இலக்காக இருந்ததோடு 417 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. அதற்கிணங்க இறப்பர் மீள் பயிர் செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தக் காணியின் பரப்பு 1031 ஹெக்டயராகும். இறப்பர் மீள்பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு மானியமாக 404.67 மில்லியன் ரூபா செலவிடபப்ட்டுள்ளன.



பால் வெட்டப்படும் இறப்பர் பயிரொன்று – கால

## 2.2. கன்று உற்பத்தி

திணைக்களத்தின் மூலம் 08 நாற்றுமேடைகளைள உருவாக்கியுள்ளதோடு அதில் 07 நாற்றுமேடைகள் ஊடாக கன்று உற்பத்தி செய்து விநியோகிக்கப்டும். அம்பாறை மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டள்ள பதியதலாவ நாற்றுமேடையில் கன்று உற்பத்தி நடவடிக்கை 2017 ஆம் ஆண்டு மேற்கொள்வதற்காகவுள்ளது.

## 2.3. மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களிற்காக 1115 ஹெக்டயார் பரப்பு இலக்காகக் காணப்பட்டதோடு அவற்றுள் 478.58 ஹெக்டயாரிற்கு மழைக்கவசங்கள் பயன்படுத்தப்பட்டன. சிறு தோட்டங்களிற்கு மானியமாக 3.47 மில்லியன் ரூபாவும் பெருந்தோட்டக் கம்பனிகளின் பொருட்டு 3570 ஹெக்டயார் பரப்பும் இலக்காக காணப்பட்டதோடு, அவற்றுள் அதிகமான அக்கறையினால் 3778.29 ஹெக்டயார் பரப்பிற்கு மழைக்கவசத்தைப் பயன்படுத்துவதற்கு மானியமாக 41.51 மில்லியன் ரூபாவும் செலவழிக்கப்பட்டன.



மழைகாப்பிடப்பட்ட இறப்பர் காணியொன்று

## 2.4. ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம்

முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர்செய்கையுடன் இறப்பர் பயிர் செய்கையாளர்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக ஊடு பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 755 ஹெக்டயார் பரப்பு இலக்காக காணப்பட்டதுடன் அவற்றுள் 160.66 ஹெக்டயார் பரப்பு பயிரிடப்பட்டன. ஊடுபயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக மானியமாக 0.98 மில்லியன் ரூபா தொகையாக சிறு இறப்பர் பயிர்ச்செய்கையாள்ர்களுக்கு செலுத்தப்பட்டன.



இறப்பர் பயிருடன் வாழை பயரிடப்பட்ட காணியொன்



இறப்பர் பயிருடன் அன்னாசி பயரிடப்பட்ட காணியொன்று

## 2.5 பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக சாதாரண இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒ ட்டுச் செய்கையாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பன நடாத்தப்பட்டன. இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சதாரணமாக இறப்பர் பால் வெட்டுபவர்ளுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 3080 ஆனதோடு அவர்களுள் 2660 நபர்கள் பயிற்சியை பூர்த்தி செய்தார்கள். பால்வெட்டபவர்கள் சாதாரண இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1.95 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 390 ஆனதோடு அவர்களுள் 343 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்படடன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 3.60 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சிக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 270 ஆனதோடு அவர்களுள் 207 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 0.16 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. இறப்பர் அபிவிருத்தி அலுவலர்களது வெளிக்கள பயிற்சிக்காக இலக்கின் அளவு 98 ஆவதோடு அதில் 66 பேர் பயிற்சிக்காக கலந்துகொண்டனர். அதற்கான தொகை 8.33 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.



பால்வெட்டுவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



பாரம்பரியமற்ற பிரதேசங்களில் உள்ள இறப்பர் காணி

## 2.6 பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர் செயற்திட்டம்

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்களை விஸ்தரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் மொணராகலையில் 95.23 ஹெக்டெயரும் அம்பாறையில் 400.29 ஹெக்டெயரும் பதுளையில் 46.71 ஹெக்டெயரும் அம்பாந்தோட்டையில் 7.51 ஹெக்டெயரும் என்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இவ்வருடம் பயிர்ச்செய்யப்பட்ட முழு நிலப்பரப்பு 549.74 ஹெக்டெயரும் ஆகும்.

# 3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2015

கடந்த வருடங்கள் சிலவற்றுள் இறப்பர் பயிர்செய்கை காணியின் பரப்பானது அதிகரிப்பை காட்டி நிற்கிறது. 2015ம் ஆண்டில் நாடு முழுவதும் மதிப்பிடப்பட்ட மொத்த இறப்பர்க் காணியின் அளவு 2010ம் ஆண்டில் நிலவிய இறப்பரக்காணிக் கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

## 3.1. இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு

**இறப்பர் பயிர்செய்கை நில அளவு - 2015ஆம் ஆண்டில்**

| | தனியார் துறை (20 ஹெக்டயாருக்கும் குறைந்த நிலம்) ஹெக் | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி (20 ஹெக்டயாருக்கும் கூடுதலான இடம்) ஹெக் | மொத்தம் ஹெக் |
|---|---|---|---|
| 2010ம் ஆண்டில் இறப்பர் காணி கணக்கெடுப்பில் அறிக்கையிடப்பட்ட காணியின் அளவு | 79,395 | 46,250 | 125,645 |
| 2011ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 80,018 | 48,516 | 128,534 |
| 2012 ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 82,170 | 48,610 | 130,780 |
| 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 85,083 | 48,585 | 133,668 |
| 2014 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 85,100 | 49,037 | 134,137 |
| 2015 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 87,604 | 48,978 | 136,582 |

**புள்ளிவிபர அட்டவணை ii**

அடிப்படையிலும், எஞ்சிய 36% அளவு பெருந்தோட்டக் கம்பனித் தோட்டங்களாகவும் இருக்கின்றன. இப்பயிர் நில அளவில் முதிர்ச்சியடையாத பயிருள்ள காணியின் அளவு 47,290 ஹெக்டயராகவும், பால் வெட்டுகின்ற முதிர்ச்சியடைந்த காணியின் அளவு 89,292 ஹெக்டயராகவும் மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அப்பயிர் செய்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மொத்த உற்பத்தியின் அளவு 88,567 மெட்றிக் தொன்னாகும். 2015ம் வருடத்தில் ஒரு ஹெக்டயாரிலிருந்து பெற்றுக் கொண்ட வருடாந்த அறுவடை காய்ந்த இறப்பர் 992 கிலோகிராமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## 3.2. உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு

### 3.2.1. இறப்பர் உற்பத்தி

2015 ஆம் வருடத்தின் மொத்த இறப்பர் உற்பத்தி 88,567 மெட்றிக்தொன்னாகும். இது கடந்த வருடத்தின் மொத்த உற்பத்தியான 98,573 மெட்றிக்தொன்னுடன் அளவிடும் போது 10,006 கிலோகிராம் குறைவினை காட்டுகின்றது. இது கடந்த வருடத்துடன் ஒப்பீட்டு ரீதியில் 10% குறைவினைக் காட்டுகிறது. இவ்வாறு உற்பத்தி குறைவிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணி 2013, 2014 ஆம் ஆணடுடன் ஒப்பீடாக இறப்பரின் விலை வீழ்ச்சியும் அதிக மழைவீழ்ச்சியையும் காணப்பட்டமையேயாகும்.

**2014 – 2015 ஆண்டுகளின் மொத்த இறப்பர் உற்பத்தி (மெட்றிக்டொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் கிரேப் | சோல் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் T.S.R | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 48,539 | 1,022 | 2,410 | 11,832 | 7,615 | 27,155 | 98,573 |
| **2015** | 44,392 | 886 | 1,939 | 8,266 | 7,606 | 25,478 | 88,567 |

**புள்ளிவிபர அட்டவணை iii**



**சீட் இறப்பர் உற்பத்தி**



**கிரேப் இறப்பர் உற்பத்தி**

2015 ஆண்டு மாவட்ட ரீதியில் இறப்பர் உற்பத்தி

| மாவட்டம் | மாவட்ட உற்பத்தி மெ.தொ. | தேசிய உற்பத்திகது மாவட்ட ரீதியிலான பங்களிப்பு % |
|---|---|---|
| களுத்துறை | 21,435.07 | 24.20 |
| கேகாலை | 26,988.95 | 30.47 |
| கம்பஹா | 2,841.70 | 3.21 |
| குருநாகலை | 2,029.80 | 2.29 |
| கண்டி | 1,382.60 | 1.56 |
| மாத்தளை | 944.71 | 1.07 |
| இரத்தினபுரி | 18,522.42 | 20.91 |
| காலி | 4,611.04 | 5.21 |
| மாத்தறை | 3,156.23 | 3.56 |
| அம்பாந்தோட்டை | 60.58 | 0.07 |
| கொழும்பு | 4,761.78 | 5.38 |
| மொனராகலை | 949.92 | 1.07 |
| பதுளை | 769.82 | 0.87 |
| புத்தளம் | 9.04 | 0.01 |
| அம்பாறை | 103.34 | 0.12 |
| **மொத்தம்** | **83,805.22** | **100.00** |

**புள்ளிவிபர அட்டவணை iv**

### 3.2.2. உற்பத்திச் செலவு

ஒரு கிலோ உலர்ந்த இறப்பரின் உற்பத்திக்காக 2015 ஆம் வருடத்தில் தனியார் துறையினரின் சாதாரண உற்பத்திச் செலவு ரூபா: 170.00 ஆகும். இது கடந்த வருட உற்பத்திச் செலவு ரூபா: 160.00 ஆகும். தோட்ட கம்பனிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் உற்பத்தி செலவாக ரூபாய் 285.00 ஆவதோடு கடந்த வருடத்தில் அப்பெறுமதி ரூபாய் 280.00 ஆகும். மகசூல் குறைவடைந்தமையால் உற்பத்தி செலவு அதிகரிக்கப்பட வேண்டும் உற்பத்தி செலவானது 2002 ம் ஆண்டு தொடக்கம் அதிகரித்துச் செல்லகின்ற முறையினைக் புள்ளிவிபர அட்டவணை v காட்டுகின்றது.

## இறப்பர் உற்பத்திச் செலவு

*( 01 கி.கிராம் 1/ ரூபா)*

| ஆண்டு | பெருந்தோட்டக் கம்பனி | தனியார் துறை |
|---|---|---|
| 2002 | 55.74 | 54.00 |
| 2003 | 59.76 | 63.30 |
| 2004 | 65.98 | 73.37 |
| 2005 | 72.56 | 77.37 |
| 2006 | 87.65 | 97.20 |
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |
| 2013 | 245.00 | 150.00 |
| 2014 | 280.00 | 160.00 |
| 2015 | 285.00 | 170.00 |

**புள்ளிவிபர அட்டவணை v**

## இறப்பர் உற்பத்திச் செலவு 2002-2015



## 3.3. உள்நாட்டு இறப்பர் நுகர்வு

இந்நாட்டில் உற்பத்திச் செய்யப்பட்ட இயற்கை இறப்பர் கடந்த காலங்களில் முக்கியமாக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதியான தொழில்நுட்ப மூலப்பொருளாக இருந்ததோடு, தற்போது இந்நிலைமை மாற்றமடைந்து உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக அதிகமான அளவில் இறப்பரினை பயன்படுத்தும் தன்மையினை காண முடியும். அதற்கிணங்க 2015 ஆண்டில் இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 127300 மெட்றிக் டொன்னாகும். இந்த வருடத்தில் இறப்பர் உற்பத்தி கடந்த வருடத்தை விட குறைந்து காணப்படுவதோடு கடந்த வருடத்தில் இறப்பர் தொகையில் தேசிய நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்காக இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டள்ளது. இவ் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு 54376 மெற்றிக்தொன் ஆகும். இவ்வளவு தேசிய இறப்பர் நுகர்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 3.4. மூலப் பொருட்களாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி

கடந்த 2014 ஆம் ஆணடுடன் ஒப்பிடுகையில் 2015 ஆண்டில் இலங்கையில் இறப்பர் எற்றுமதியில் சுட்டிக்காட்டத்தக்கவாறு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**2014 - 2015 ஆண்டுகளில் இலங்கையில் இறப்பர் எற்றுமதி செய்யப்பட்ட இறப்ப்ர அளவுகள்**

| மாதம் | கப்பலில் ஏற்றிய அளவு **(மெட்றிக் டொன்)** | |
|---|---|---|
| | 2014 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு |
| ஜனவரி | 3,023 | 875 |
| பெப்ரவரி | 2,141 | 961 |
| மார்ச் | 1,808 | 1001 |
| ஏப்ரல் | 1,613 | 1102 |
| மே | 1,169 | 1067 |
| ஜூன் | 1,109 | 964 |
| ஜூலை | 915 | 713 |
| ஆகஸ்ட் | 1,071 | 621 |
| செப்டம்பர் | 895 | 803 |
| ஒக்டோபர் | 898 | 751 |
| நவம்பர் | 705 | 665 |
| டிசம்பர் | 959 | 850 |
| **மொத்தம்** | **16,306** | **10373** |

**புள்ளிவிபர அட்டவணை vi**




**இறப்பர் ஏற்றுமதி 2014-2015**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் இலங்கையில் எற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**2014 - 2015 ஆண்டகளில் ஏற்றுமதி செயய்ப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில் (மெற்றிக்தொன்)**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 1967 | 2296 | 17 | 9860 | 913 | 1253 | 16306 |
| **2015** | 903 | 1847 | 13 | 6888 | 417 | 305 | 10373 |

**புள்ளிவிபர அட்டவணை vii**

**ஏற்றுமதி செயய்ப்பட்ட இறப்பரின் அளவுகளில் கப்பலில் ஏற்றும்வரையான பெறுமதி**

(மில்லியன் *ரூபா*)

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 587.3 | 1234.0 | 5.4 | 3313.0 | 306.1 | 469.9 | 5916.1 |
| **2015** | 216.6 | 926.4 | 1.4 | 2135.8 | 141.8 | 125.5 | 3547.6 |

**புள்ளிவிபர அட்டவணை viii**

மொத்த ஏற்றுமதி இறப்பரில் க.ஏ.செ (F.O.B) பெறுமதி அட்டவணை iX இல் காட்டப்பட்டுள்ளது.

**மொத்த ஏற்றுமதி இறப்பரில் க.ஏ.செ பெறுமதி**

(ரூபா மில்லியன்)

| வருடம் | ஏற்றுமதித் தொகை மெட்றிக் டொன் | மொத்தப் பெறுமதி ரூபா மில்லியன் | கிலோ.கிராம் 01ன் பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| **2014** | 16306 | 5916.12 | 362.83 |
| **2015** | 10373 | 3547.90 | 342.03 |

**புள்ளிவிபர அட்டவணை ix**

இறப்பர் ஏற்றுமதியானது பிரதானமாக தனியார் துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் பதிவுசெய்யப்பட்ட 119 ஏற்றுமதியாளர்கள் இருக்கிறார்கள். அந்த ஏற்றுமதியாளர்கள் 119 பேரும் இத்திணைக்களத்தில் 2015 ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**இறப்பரினை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் 2015**

**(மெட்றிக் டொன்)**

| நாடு | கொள்வனவு செய்த தொகை | % |
|---|---|---|
| பாக்கிஸ்தான் | 1636 | 16 |
| இந்தியா | 1379 | 13 |
| ஜப்பான் | 1127 | **10** |
| ஜேர்மன் | 641 | **6** |
| மலேசியா | 478 | 5 |
| இத்தாலி | 470 | 5 |
| தென் ஆப்பிரிக்கா | 426 | 4 |
| அமெரிக்கா | 424 | 4 |
| சீனா | 317 | 3 |
| ஹோங்கொங் | 312 | 3 |
| ஸ்பெயின் | 87 | 1 |
| ஐரோப்பிய சங்கம் | 55 | 1 |
| ஏனைய நாடுகள் | 3021 | 29 |
| **மொத்தம்** | **10373** | **100** |

**புள்ளிவிபர அட்டவணை X**

## 3.5. இறப்பர் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு - 2015 ஆண்டு

| மாதம் | அளவு (மெற்றிக்தொன்) |
|---|---|
| ஜனவரி | 4047 |
| பெப்ரவரி | 3210 |
| மார்ச் | 1563 |
| ஏப்ரல் | 1206 |
| மே | 3716 |
| ஜூன் | 1470 |
| ஜூலை | 3846 |
| ஆகஸ்ட் | 9865 |
| செப்டம்பர் | 5700 |
| ஒக்டோபர் | 7337 |
| நவம்பர் | 5046 |
| டிசம்பர் | 7370 |
| **மொத்தம்** | **54,376** |

**புள்ளிவிபர அட்டவணை xi**

**2014 - 2015 ஆண்டகளில் இறக்குமதி செயய்ப்பட்ட இயற்கை இறப்பரின் அளவு வகை அடிப்படையில்**

**(மெற்றிக்தொன்)**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 21743 | 0 | 15 | 0 | 208 | 7259.06 | **29,225.06** |
| **2015** | 38182 | 0 | 0 | 0 | 892 | 15302 | **54,376** |

**புள்ளிவிபர அட்டவணை xii**

**மொத்த இறப்பர் இறக்குமதி - 2015**

**(மெற்றிக்தொன்)**

| வகை | இறக்குமதி செய்யப்பட்ட அளவு மெ.தொ. | இறக்குமதி பெறுதி ரூ.மி. |
|---|---|---|
| இயற்கை இறப்பர் | 54376.6 | 11691.4 |
| செயற்கை இறப்பர் | 71698.6 | 15643.8 |
| மறுசிருமைக்கப்பட்ட இறப்பர் | 25633.3 | 2307.0 |
| ஸ்கிரேப் இறப்பர் | 12470.0 | 749.9 |
| தொகுதி இறப்பர் | 8297.0 | 3239.6 |
| முழுமையடையாத முடிவு இறப்பர் | 7908.0 | 995.8 |
| முடிவுப்பொருள் உற்பத்தி | 10227.4 | 6790.5 |
| முடிவுப்பொருள் உற்பத்தி (கணக்கு) | 8362887 | 12822.0 |

**புள்ளிவிபர அட்டவணை xiii**

## 3.6. இறப்பர் விலை

அகில மொத்த தேசிய உற்பத்தியில் மந்தமான வளர்ச்சியால் இயற்கை இறப்பருக்கான கேள்வி குறைவடைந்தமையால் 2011 ஆம் ஆண்டிலிருந்து இறப்பர் விலை குறைந்து காணப்படவதோடு 2014, 2015 ஆண்டுகளில் இறப்பர் விலை பின்வருமாறு.

**இறப்பர் வகைக்கு ஏற்ப சாதாரண விலை**

*(1 கிலோ ரூபா)*

| வருடம் | வருடாந்த சாதாரண விலை | | |
|---|---|---|---|
| | சீட் இறப்பர் இலக்கம் 1 | ஸ்கிரேப் இறப்பர் இலக்கம்.11XBR | லேடெக்ஸ் கிரேப் இலக்கம்: 1X |
| 2014 | 285.76 | 212.75 | 309.90 |
| 2015 | 245.93 | 187.74 | 299.17 |

**புள்ளிவிபர அட்டவணை xiv**

## 2015 ஆண்டின் மாதாந்த இறப்பர் விலை

ரூபாய்

| மாதம் | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்) | | | | | லேடெக்ஸ் கிரேப் | | | | | ஸ்கிரேப் கிரேப் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | IX | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | 4 | FB | SKIM |
| ஜனவரி | 304.83 | 297.25 | 302.50 | 259.00 | 282.00 | 289.94 | 283.83 | 263.71 | 231.00 | 205.21 | 195.83 | 186.67 | 180.50 | 171.64 | 160.00 | 154.29 |
| பெப்ரவரி | 275.75 | 277.17 | 266.00 | 246.25 | 243.00 | 262.50 | 258.60 | 228.43 | 211.86 | 199.79 | 190.25 | 175.00 | 156.40 | 151.93 | 135.00 | 122.67 |
| மார்ச் | 244.30 | 239.00 | 234.00 | 232.75 | 217.75 | 249.00 | 240.88 | 224.50 | 211.28 | 186.21 | 175.83 | 162.50 | 151.08 | 145.67 | 132.00 | 109.58 |
| ஏப்ரல் | 219.30 | 217.20 | 211.50 | 208.00 | 203.33 | 256.36 | 250.86 | 227.94 | 217.00 | 177.75 | 166.00 | 158.50 | 154.93 | 147.29 | 137.50 | 89.82 |
| மே | 233.75 | 227.00 | ඉ.නැත | 223.67 | ඉ.නැත. | 289.43 | 280.75 | 268.38 | 245.88 | 188.56 | 170.43 | 162.88 | 167.50 | 155.75 | 137.33 | 94.25 |
| ஜூன் | 235.00 | 230.50 | 224.00 | ඉ.නැත | ඉ.නැත | 312.67 | 305.13 | 285.89 | 269.00 | 218.11 | 191.44 | 178.39 | 179.44 | 171.56 | 156.67 | 117.19 |
| ஜூலை | 243.00 | 235.77 | 235.00 | 221.75 | ඉ.නැත | 320.00 | 313.21 | 295.78 | 276.22 | 226.44 | 207.00 | 196.50 | 190.04 | 179.53 | 160.75 | 147.43 |
| ஆகஸ்ட் | 243.33 | 231.33 | 228.00 | 221.70 | ඉ.නැත | 307.60 | 305.40 | 291.14 | 270.14 | 214.00 | 205.00 | 194.60 | 186.15 | 178.57 | 162.00 | 150.04 |
| செப்டம்பர் | 238.83 | 229.50 | 223.00 | ඉ.නැත | ඉ.නැත | 316.01 | 311.00 | 301.11 | 291.33 | 196.39 | 189.78 | 185.93 | 186.00 | 179.06 | 164.13 | 160.41 |
| ஒக்டோபர் | 241.00 | 237.50 | 231.50 | 220.00 | ඉ.නැත | 341.61 | 338.00 | 326.06 | 313.50 | 196.81 | 191.00 | 188.20 | 185.64 | 179.86 | 169.00 | 168.17 |
| நுவம்பர் | ඉ.නැත | 245.67 | ඉ.නැත | 220.00 | ඉ.නැත | 336.30 | 332.14 | 317.79 | 304.57 | 195.14 | 188.90 | 188.00 | 185.00 | 179.83 | 174.00 | 169.98 |
| டிசம்பர் | 226.17 | 224.33 | 196.33 | 188.50 | ඉ.නැත | 308.58 | 336.00 | 317.50 | 290.08 | 185.43 | 181.40 | 178.67 | 179.50 | 206.64 | 257.50 | 176.80 |
| சாரதண | **245.93** | **241.02** | **235.18** | **224.16** | **236.52** | **299.17** | **296.32** | **279.02** | 260.99 | 199.16 | **187.74** | **179.65** | **175.18** | **170.61** | 162.16 | **138.38** |

புள்ளிவிபர அட்டவணை x

## 3.7 இறப்பர் வர்த்தகர்கள்

இறப்பர் வர்த்தகத்திற்கான அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வது சட்டரீதியான தேவையாக அமைவதோடு, 2015ம் ஆண்டில் 1166 இறப்பர் வர்த்தகர்கள் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துள்ளதுடன், 184 புதிய அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கேற்ப, 2015ம் ஆண்டில் 1350 இறப்பர் வர்த்தகர்கள் இத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ரீதியாக அவ் வர்த்தக அனுமதிப் பத்திர வெளியீடுகள் இவ்வாறு அமையும்.

| மாவட்டம் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை | புதிதாக வெளியிட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 50 | 19 |
| கம்பஹா | 72 | 08 |
| களுத்துறை | 312 | 53 |
| இரத்தினபுரி | 203 | 23 |
| கேகாலை | 380 | 61 |
| குருணாகல் | 16 | 01 |
| கண்டி | 17 | - |
| முாத்தளை | 05 | - |
| காலி | 60 | 09 |
| மாத்தறை | 36 | 10 |
| அம்பாந்தோட்டை | 01 | - |
| மொனராகலை | 13 | - |
| பதுளை | 01 | - |
| **மொத்தம்** | **1166** | **184** |

**புள்ளிவிபர அட்டவணை xvi**

## 3.8 இறப்பர் மீள் பயிர்ச்செய்கை/புதிய பயிர்ச்செய்கை மானிய முறை

மானிய முறையின் கீழ், இறப்பரை மீண்டும் அல்லது புதிதாகப் பயிரிடுவதற்காக 1953 36ம் இலக்க இறப்பர் மீள்பயிரிடுதல் சட்டத்தின் 07வது வாசகத்துக்கு ஏற்ப அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இச் சட்டத்துக்கேற்ப, அனைத்து காணிகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவுசெய்யப்பட்ட இறப்பர் காணியொன்றில் காணப்படும் பயிர்ச்செய்கைக்கான ஆயுள் 20 வருடங்களைக் கடந்த பின்னர் அக் காணி மானிய முறையின் கீழ் மீள் பயிரிடுவதற்கான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான தகுதியைப் பெறுகின்றது.

இறப்பர் பயிரிடலில் ஈடுபடுவோரை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக ஒரு ஹெக்டயாருக்கு ரூ.125,000 மீள்பயிரிடல்/புதிய பயிர்ச்செய்கை மானியத் தொகையாக 2011ம் ஆண்டில் கீழ்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

புதிதிதாகப் பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூ. 150,000

மீளப் பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூ. 175,000

இம் மானியத் தொகை 08 தவணைகளில் வழங்கப்படும். தவணைகள் வழங்கப்படும் விதம் கீழ்வரும் குறிப்பில் காட்டப்படுகின்றது.

| **தவணை** | **புதிய பயிர்ச்செய்கை ஒரு ஹெக்டயாருக்கு (பணம் ரூபாவில்)** | **மீளப் பயிரிடல் ஒரு ஹெக்டயாருக்கு (பணம் ரூபாவில்)** |
|---|---|---|
| முதலாம் தவணை (1) | 6,000.00 | 8,000.00 |
| இரண்டாம் தவணை (2) | 36,000.00 | 43,000.00 |
| மூன்றாம் தவணை (3) | 12,000.00 | 15,000.00 |
| நான்காம் தவணை (4) | 18,000.00 | 21,000.00 |
| ஐந்தாம் தவணை (5) | 18,000.00 | 21,000.00 |
| ஆறாம் தவணை (6) | 18,000.00 | 21,000.00 |
| ஏழாம் தவணை (7) | 19,000.00 | 22,000.00 |
| எட்டாம் தவணை (8) | 23,000.00 | 24,000.00 |
| **மொத்தம்** | **150,000.00** | **175,000.00** |

புள்ளிவிபர அட்டவணை **xvii**

## 3.9 புதிய பயிரிடலையும் உள்ளடக்கி இறப்பர் பயிர்ச்செய்கையின் முன்னேற்றம்

இறப்பர் அபிவிருத்திக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பணி கீழ்க்குறிப்பிட்டவாறு அமையும். அதற்கேற்ப இந்நாட்டு இறப்பர்த் தொழிலை வலிமையான பொருளாதாரத் திட்டமாக நடத்திச் செல்வதற்காக, முதிர்ந்த, காலாவதியான மற்றும் பயனற்ற இறப்பர் பயிர்ச்செய்கைகளை அகற்றி அக்காணிகளில் மீள்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும். பயனுள்ள பயிர்ச்செய்கையை நடத்திச் செல்வதற்காக மொத்த இறப்பர் பயிர்ச்செய்கைக் காணிகளின் அளவில் 3%தையேனும் வருடாந்தம் மீளப்பயிரிட வேண்டும். அக்காணிகளின் அளவும் சுமார் 4000 ஹெக்டயார்களாகும். 2015ம் வருட மதிப்பிடப்பட்ட மீள்பயிர்ச்செய்கை/புதிய பயிர்ச்செய்கை இறப்பர் காணிகளின் அளவு 11015 ஹெக்டயார்களாகும். 2015ம் ஆண்டுக்கான மீள் பயிரீட்டுக்கென இலக்கான காணிகளின் அளவு சிறு தோட்டங்களின் கீழ் 2145 ஹெக்டயார்கள் மற்றும் தோட்டக் கம்பனிகளின் கீழ் 1700 ஹெக்டயார்களும் என்ற ரீதியில் 3845 ஹெக்டயார்களாகும். ஆண்ன் புதிய பயிரீட்டு இலக்கு சிறு தோட்டங்களின் கீழ் வழக்கமாகப் பயிரிடப்படும் பிரதேசங்களில் 1970 ஹெக்டயார்களும் வழக்கமாகப் பயிரிடப்படாத பிரதேசங்களில் 5200 ஹெக்டயார்கள் என்ற ரீதியில் 7170 ஹெக்டயார்களாகும்.

மீளப் பயிரிடல் மற்றும் புதிய பயிரீட்டு மானிய முறைகளின் கீழ் பயிரிடுவதற்காகக் கிடைக்கப்பபெற்ற விண்ணப்பப் படிவங்கள், வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சரியான முறையில் பயிரிடப்பட்ட காணிகளின் அளவுகள் புள்ளிவிபர அட்டவணை xviii மற்றும் xixல் குறிப்பிடப்படுகின்றது.

## இறப்பர் மீள்பயிரீட்டு மானிய முறையின் கீழ் மீள்பயிரிடப்பட்ட காணிகளின் அளவு

## (சிறு தோட்டங்களின் உரிமையாளர்கள்) 2015ம் ஆண்டு

*(ஹெக்டயார்)*

| மாவட்டம் | பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் | | வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் | | மீள்பயிரிடப்பட்ட காணிகளின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) |
| களுத்துறை | 492 | 328.41 | 485 | 323.55 | 264 | 151.13 |
| கேகாலை | 620 | 419.92 | 482 | 325.40 | 277 | 184.21 |
| கம்பஹா | 107 | 60.66 | 82 | 49.98 | 58 | 38.31 |
| குருணாகல் | 27 | 42.40 | 21 | 29.04 | 06 | 17.60 |
| கண்டி | 40 | 30.41 | 40 | 30.41 | 20 | 12.12 |
| மாத்தளை | 03 | 7.49 | 03 | 7.49 | 02 | 4.85 |
| இரத்தினபுரி | 234 | 213.46 | 231 | 225.58 | 119 | 110.16 |
| காலி | 34 | 31.48 | 27 | 22.54 | 09 | 6.93 |
| மாத்தறை | 25 | 26.85 | 23 | 23.42 | 04 | 3.67 |
| மொனராகலை | 06 | 9.29 | 06 | 9.29 | 04 | 6.15 |
| கொழும்பு | 161 | 147.10 | 129 | 114.72 | 89 | 78.65 |
| **மொத்தம்** | **1749** | **1317.47** | **1529** | **1161.42** | **852** | **613.78** |

**புள்ளிவிபர அட்டவணை xviii**

## புதிதாக இறப்பர் பயிரீட்டு மானிய முறையின் கீழ் மீள்பயிரிடப்பட்ட காணிகளின் அளவு
## (சிறு தோட்டங்களின் உரிமையாளர்கள்) 2015ம் ஆண்டு

*(ஹெக்டயார்)*

| மாவட்டம் | பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் | | வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்ள் | | மீள்பயிரிடப்பட்ட காணிகளின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) | காணித் தொகுதி அளவு | நில அளவு (ஹெக்டயார்) |
| களுத்துறை | 143 | 60.23 | 137 | 57.51 | 73 | 28.67 |
| கேகாலை | 366 | 189.50 | 288 | 119.42 | 168 | 72.28 |
| கம்பஹா | 52 | 26.26 | 34 | 17.79 | 31 | 20.10 |
| குருணாகலை | 38 | 19.54 | 37 | 18.08 | 22 | 12.49 |
| கண்டி | 25 | 13.23 | 24 | 12.60 | 10 | 5.37 |
| மாத்தளை | 09 | 8.70 | 08 | 08.10 | - | - |
| இரத்தினபுரி | 107 | 69.67 | 130 | 83.66 | 77 | 40.81 |
| காலி | 40 | 20.81 | 35 | 18.41 | 15 | 5.47 |
| மாத்தறை | 30 | 28.43 | 27 | 25.06 | 08 | 16.08 |
| அம்பாந்தோட்டை | 47 | 27.59 | 40 | 22.64 | 12 | 7.51 |
| கொழும்பு | 65 | 58.08 | 56 | 52.46 | 40 | 18.04 |
| மொனராகலை | 157 | 96.05 | 156 | 95.23 | 156 | 95.23 |
| பதுளை | 31 | 53.49 | 29 | 46.71 | 29 | 46.71 |
| அம்பாறை | 488 | 453.29 | 488 | 453.29 | 435 | 400.29 |
| **மொத்தம்** | **1598** | **1124.87** | **1489** | **1030.96** | **1076** | **769.05** |

**புள்ளிவிபர அட்டவணை xix**

## இறப்பர் மீள்பயிரீட்டு மானிய முறையின் கீழ் மீள்பயிரிடப்பட்ட காணிகளின் அளவு
## (தோட்டப் பிரிவு) 2015

| பிரதேச காரியாலயங்கள் | பயிரிடப்பட்ட காணிகள் அளவு (ஹெக்டயார்) |
|---|---|
| களுத்துறை | 53.90 |
| கேகாலை | 346.25 |
| காலி | 9.22 |
| மொனராகலை | 8.00 |
| மொத்தம் | **417.37** |

**புள்ளிவிபர அட்டவணை xx**



# இறப்பர் மீள்பயிரிடல் காணிகள் அளவு 1990-2015

(ஹெக்டயார்)

| ஆண்டு | சிறு தோட்டப் பிரிவு | பெருந் தோட்டக் கம்பனிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 3584 | 1617 | 5201 |
| 1991 | 3507 | 1794 | 5301 |
| 1992 | 2028 | 1889 | 3917 |
| 1993 | 2419 | 2817 | 5236 |
| 1994 | 1623 | 2138 | 3761 |
| 1995 | 1778 | 1461 | 3239 |
| 1996 | 1983 | 1217 | 3200 |
| 1997 | 1172 | 2045 | 3217 |
| 1998 | 1173 | 2542 | 3715 |
| 1999 | 665 | 3866 | 4531 |
| 2000 | 770 | 1853 | 2623 |
| 2001 | 558 | 4584 | 5142 |
| 2002 | 712 | 2066 | 2778 |
| 2003 | 565 | 494 | 1059 |
| 2004 | 819 | 1264 | 2083 |
| 2005 | 1257 | 2329 | 3586 |
| 2006 | 1122 | 2331 | 3453 |
| 2007 | 993 | 4199 | 5192 |
| 2008 | 812 | 5293 | 6105 |
| 2009 | 1002 | 5360 | 6362 |
| 2010 | 1186 | 4756 | 5942 |
| 2011 | 1123 | 1927 | 3050 |
| 2012 | 1117 | 2126 | 3243 |
| 2013 | 1710 | 2784 | 4494 |
| 2014 | 1343 | 1554 | 2897 |
| 2015 | 614 | 2637 | 3251 |

புள்ளிவிபர அட்டவணை xxi

# புதிய இறப்பர் பயிட்டுக் காணிகளின் அளவு

(ஹெக்டயார்)

| ஆண்டு | சிறு தோட்டப் பிரிவு | பெருந் தோட்டக் கம்பனிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 1039 | 258 | 1297 |
| 1991 | 1602 | 202 | 1804 |
| 1992 | 612 | 302 | 914 |
| 1993 | 907 | 135 | 1042 |
| 1994 | 670 | 37 | 707 |
| 1995 | 651 | 45 | 696 |
| 1996 | 1208 | 35 | 1243 |
| 1997 | 793 | 21 | 814 |
| 1998 | 516 | 17 | 533 |
| 1999 | 223 | 48 | 271 |
| 2000 | 243 | 34 | 277 |
| 2001 | 150 | 14 | 164 |
| 2002 | 227 | 7 | 234 |
| 2003 | 451 | 7 | 458 |
| 2004 | 518 | 5 | 523 |
| 2005 | 1032 | 11 | 1043 |
| 2006 | 1603 | 297 | 1900 |
| 2007 | 1701 | 333 | 2034 |
| 2008 | 2755 | 414 | 3169 |
| 2009 | 1994 | 275 | 2269 |
| 2010 | 2857 | 96 | 2953 |
| 2011 | 2166 | 838 | 3004 |
| 2012 | 2297 | 1086 | 3383 |
| 2013 | 2979 | 912 | 3891 |
| 2014 | 1428 | 133 | 1561 |
| 2015 | 769 | 221 | 990 |

புள்ளிவிபர அட்டவணை xxii

## 3.10 மானியங்கள் வழங்கல்

மீளாய்வுக்கு உட்படும் 2015ம் ஆண்டில் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு அவ்வவ் பயிர்ச்செய்கை களுக்கான மானியத் தொகையை வழங்குவதற்கு திணைக்களத்தால் இயன்றுள்ளது.

**இறப்பர் பயிர்ச்செய்கைக்கான மானியங்கள் வழங்கல்**

| திட்டம் | வழங்கப்பட்ட மொத்தப் பணம் (ரூ.மி) |
| --- | --- |
| 2015 மீள்பயிரீட்டு மானியங்கள் (தனியார் பிரிவு) | 173.36 |
| 2015 ந;்ய த.ன மானியங்கள் (தனியார்) | 189.83 |
| 2015 மீள்பயிரீட்டு மானியங்கள் (பெருந்தோட்டக் கம்பனிகள்) | 231.31 |
| **மொத்தம்** | 594.50 |

**புள்ளிவிபர அட்டவணை xxiii**

## 3.11 இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடைகள் மற்றும் கன்றுகளை வழங்கல்

இறப்பர் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படுவதுடன் இறப்பர் பயிர்ச் செய்கை மீது பெருந்தோட்டக்காரர்களின் ஈடுபாடு அதிகரித்தது. இதனால் இறப்பர் கன்றுகளின் கேள்வி தொடர்ச்சியாக உயர்ந்து சென்றது. இதற்கான கன்று உற்பத்திக்கு விசேட அவதானம் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டது. அதற்காக திணைக்களத்தின் இறப்பர் கன்று நாற்றுமேடையைப் போன்றே தனியார் இறப்பர் கன்று நாற்றுமேடைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

தனியார் இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடைகள் மற்றும் வர்த்தக இறப்பர் கன்று நாற்றுமேடைகளை அமைப்பதற்காக திணைக்களத்திடமிருந்து அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆரம்ப சந்தர்ப்பத்தில் இந் நாற்றுமேடைகளில் உயர் தரத்திலான கூட்டுக் கிளை நாற்றுமேடைகளை அமைப்பதற்குத் தேவையான நடுகைப் பொருட்கள் திணைக்களத்துக்குரிய நாற்றுமேடைகளிலிருந்து வழங்கப்படும்.

### 3.11.1. அரச நாற்று மேடைகள்

**அரசாங்க நாற்று மேடைகளில் கன்றுகளை உற்பத்தி செய்தலும் கன்றுகளை வழங்கலும் - 2015**

| நாற்றுமேடையின் பெயர் | நாற்றுமேடைகளுக்குரிய மாவட்டம் | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கரபிஞ்ச | இரத்தினபுரி | 88113 | 77419 |
| மீரிகம | கம்பஹா | 128809 | 128244 |
| வெலிகடமுல்ல | கம்பஹா | 251296 | 166676 |
| ஆகல்ஓய | களுத்துறை | 250157 | 175503 |
| கும்புக்கன | மொனராகலை | 477765 | 375597 |
| குருகொடை | களுத்துறை | 97465 | 102715 |
| மித்தெனிய | அம்பாந்தோட்டை | 92988 | 85901 |
| **மொத்தம்** | | **1386593** | **1112055** |

**புள்ளிவிபர அட்டவணை xxiv**




திணைக்கள நாற்றுமேடைகளிலிருந்து 2015ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட கன்று உற்பத்தி 1.85 மில்லியனாகும். அதிலிருந்து ஆண்டின் மொத்த கன்றுகளின் உற்பத்தி 1.39 மில்லியனாக உள்ளதுடன் குறிப்பிட்ட ஆண்டுக்குள் 1.11 மில்லியன் கன்றுகளை மாத்திரமே விநியோகிக்க முடிந்தது. இத் திணைக்களத்தினால் புதிய இறப்பர் கன்று நாற்றுமேடைகள் அம்பாறை, மாவட்டத்தின் பதியத்தலாவயில் தாபிக்கப்பட்டுள்ளது. இப்போது அந் நாற்றுமேடைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 2106ம் ஆண்டிலிருந்து இக் கன்றுகளின் நாற்றுமேடையில் கூட்டுக்கிளை இறப்பர் கன்று உற்பத்தி ஆரம்பிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.11.2 தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடைகள் அனுமதிப் பத்திரம் 2015

உயர் தரத்திலான கூட்டுக் கிளை இறப்பர் கன்றுகளை பெருந்தோட்டக்காரர்களுக்கு வழங்குவது திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். திணைக்களத்தின் நாற்றுமேடைகளின் கன்று உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல் கன்றுகளின் தரத்தின் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் நாற்றுமேடைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் பல நாற்றுமேடை அபிவிருத்தி நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. தனியார் பிரிவின் நாற்றுமேடைகளையும் உயர் கன்றுகளின் உற்பத்திக்காக ஈடுபடுத்துவது திணைக்களத்தின் பணியாகும். பரிந்துரைக்கப்பட்டவாறு அமைக்கப்பட்டுள்ள நாற்றுமேடைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். அனுமதிப் பத்திரங்களை வெளியிட்ட தனியார் நாற்றுமேடைகள் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் அடிக்கடி மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படுவதோடு, நாற்றுமேடைகள் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் பேணிச் செல்லுவதற்குத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படும். இந் நாற்றுமேடைகள் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் பேணப்படுகின்றனவா என்பதைப் பின்னூட்டப்படுதல் இறப்பர் அபிவிருத்தி அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

**கன்று உற்பத்தி (தனியார் நாற்றுமேடை) 2015**

| பிரதேச காரியாலய அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசம் | பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை | கன்று உற்பத்தி | குன்று விநியோகம் |
|---|---|---|---|
| கேகாலை | 106 | 1295238 | 609843 |
| கம்பஹா | 11 | 57000 | 14465 |
| மாத்தளை | 01 | 10000 | 10000 |
| கண்டி | 01 | 15000 | 15000 |
| களுத்துறை | 08 | 185313 | 36917 |
| மொனராகலை | 01 | 8000 | 6000 |
| காலி | 10 | 17561 | 2650 |
| மாத்தறை | 03 | 3750 | 3500 |
| இரத்தினபுரி | 17 | 328020 | 123720 |
| கொழும்பு | 10 | 112100 | 13550 |
| **மொத்தம்** | **168** | **2,031,982** | **835,645** |

**புள்ளிவிபர எண்ணிக்கை XXV**

## 3.12 ஊடு பயிர்ச்செய்கை

இறப்பருடன் ஊடு பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் சிறு தோட்ட காணி உரிமையாளர்களுக்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஏக்கருக்கு ரூ.4000.00 வீதம் மானியம் வழங்குதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். இதற்கேற்ப, 2015ம் ஆண்டில் ஊடு பயிர் மானியமாக 0.98 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டது.



**இறப்பருடன் வாழை பயிரிடப்பட்ட காணி**

**2015ம் ஆண்டில் ஊடுபயிர்ச் செய்கை செய்யப்பட்ட காணிகளின் அளவு**

| மாவட்டம் | பயிரிடப்பட்ட காணிகளின் அளவு (ஹெக்டயார்) |
|---|---|
| கேகாலை | 46.90 |
| கம்பஹா | 20.21 |
| குருணாகலை | 16.55 |
| கண்டி | 6.78 |
| களுத்துறை | 34.30 |
| இரத்தினபுரி | 2.17 |
| கொழும்பு | 18.58 |
| காலி | 4.60 |
| மாத்தறை | 1.52 |
| அம்பாந்தோட்டை | 6.95 |
| மொனராகலை | 2.10 |
| | **160.66** |

**புள்ளிவிபர அட்டவணை xxvi**




## 3.13. மழைக் கவசப் பாவனையை பிரபலப்படுத்தல்

முதிர்ந்த இறப்பர் பயிரிடும் காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களை மழைக் கவசப் பாவனையை ஊக்கப்படுத்துவதற்காக இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. வெற்றிகரமான மழைக் கவசங்கள் பாவிக்கப்பட்டுள்ள மரத்துக்கு அதற்காகச் செலவாகும் பணத்திலிருந்து 50% அதாவது ரூ.30 மானியமாக வழங்கப்படும்.

சிறு தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளுக்காக இதன் கீழ் மானியங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் வளர்ச்சி கீழ்வரும் புள்ளிவிபர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**மழைக் கவசங்களைப் பாவித்தல்**

| பிரிவு | மழைக்கவசங்கள் பாவிக்கப்பட்ட காணிகளின் அளவு (ஹெக்) | மானியமாக வழங்கப்பட்ட பணம் ரூ.மி. |
|---|---|---|
| சிறு தோட்டங்கள் | 478.58 | 3.47 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 3778.29 | 41.51 |
| **மொத்தம்** | **4256.87** | **44.98** |

**புள்ளிவிபர அட்டவணை xxvii**

### 3.13.1. மழைக் கவசப் பாவனை மாவட்ட மட்டத்தில்

| மாவட்டம் | பெருந்தோட்டக் கம்பனிகள் (ஹெக்) | சிறு தோட்டங்கள் (ஹெக்) |
|---|---|---|
| இரத்தினபுரி | - | 111.16 |
| கொழும்பு | - | 54.92 |
| கேகாலை | 3085.93 | 190.91 |
| கம்பஹா | - | 17.50 |
| குருணாகல் | 529.29 | 30.10 |
| கண்டி | - | 4.96 |
| மாத்தளை | - | 0.30 |
| காலி | 44.84 | 4.60 |
| மாத்தறை | - | 23.07 |
| அம்பாந்தோட்டை | - | 4.95 |
| களுத்துறை | 118.23 | 36.11 |
| **மொத்தம்** | **3778.29** | **478.58** |

**புள்ளிவிபர அட்டவணை xxviii**

## 3.14. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குக் காணிகளை பிரித்தல் நிருவாகச் சபையின் நடவடிக்கைகள்

1958 02ம் இலக்க தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (பிரித்தல் நிருவகித்தல்) சட்டத்தின் கீழ் காணிகளைப் பிரித்தல் நிருவகிக்கும் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 20 ஹெக்டயாருக்கு அதிகமான இறப்பர் தோட்டமொன்று அல்லது அதிலிருந்து ஒரு பிரிவை பிரிப்பதற்கு அல்லது விற்பனைக்குத் தேவையானபோது அச் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு அந் நிறுவனத்திலிருந்து கிடைத்த விண்ணப்பப் பத்திரங்கள் சீராக மேற்பார்வை செய்யப்பட்டு மேற்கூறப்பட்ட சபையிடம் பரிந்துரைக்காக அனுப்பப்படும். ஆண்டுக்குள் அனுப்பப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை ஐந்தாகும்.

இச் சபையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினரா கௌரவ அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கு ஏற்ப கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.15. சர்வதேச நடவடிக்கைகள்

இலங்கை சர்வதேச இறப்பர் ஆராய்ச்சிக் குழுவினதும் (ஐசுளுபு) மற்றும் இயற்கை இறப்பர் உற்பத்தியாகும் நாடுகளின் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றது. அதற்காக 2015ம் ஆண்டின் அங்கத்துவப் பணமாக இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்துக்கு ரூ.1,079,194.43ம் இறப்பர் ஆராய்ச்சிக் குழுவுக்கு ரூ.5,872,869.39ம் செலுத்தியுள்ளது.

இந்நிறுவனங்களில் அங்கத்துவம் வகிப்பதால் குறிப்பிட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு நேரடியாகவும் செயற்றிறனுடனும் பங்களிப்பதன் மூலம் அந்நியோன்னியமாக இறப்பர் தொழிலின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கின்ற தன்மை உருவாகியுள்ளது. மேலும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு தேசிய இறப்பர் விலை, உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல்கள், விளைநிலத்தின் அளவுகள், களநிலையில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை உள்ளிட்ட தேவையான அனைத்துத் தகவல்களும் உரிய காலநேரத்தில் வருடம் முழுவதும் அறிக்கையிடப்பட்டன. அவ்வாறே அந்நிறுவனங்கள் மூலம் ஏனைய நாடுகளின் தகவல்களையும் பெற்றுக் கொண்டு உரிய தரப்பினரிடையே விநியோகிக்கப்பட்டன.

கடந்த வருடத்தில் இயற்கை இறப்பர் உற்பத்தியாகும் நாடுகளில் சங்கத்தின் (யுசேஊ) வருடாந்த மாநாடு காம்போடியாவில் இடம்பெற்றது. அதற்காக இலங்கை, இந்தியா, காம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், இந்துனேசியா, மலேசியா, சீனா ஆகிய அங்கத்துவ நாடுகள் கலந்துகொண்டன.

இம்மாநாட்டில் எதிர்வரும் வருடத்துக்கான தலைமைத்துவம் காம்போடியாவிற்குக் கிடைத்தது.

## 3.16. சட்டரீதியான நடவடிக்கைகள்

இறப்பர் மீள்பயிர்ச் செய்கைக்கான மானியங்கள் சட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்ச்செய்கை அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் மானியங்களைப் பெற்றுக்கொண்ட அனைத்து விண்ணப்பதாரிகளும் அனைத்து மானியத் தொகையையும் பெற்று முடியும் வரை பயிர்ச்செய்கையை நன்றாகப் பேணிச் செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மானிய ஆணைகளுக்கு ஏற்ப கடப்பாடுடையவர் ஆவர். அனுமதிப் பத்திரம் வைத்திருப்போர் அவர்களது பயிர்ச்செய்கையை கவனிக்காது விடின் அல்லது இறுதி மானியத் தவணையைப் பெற்றுக் கொள்ளும் வரை நன்றாகப் பேணிச் செல்லவில்லை எனின் பெற்றுக்கொண்டுள்ள மானியத் தொகையை மீண்டும் திணைக்களத்துக்குச் செலுத்த ஆணையிடப்படும்.

இலங்கை சோசலிச சனநாயகக் குடியரசுக்குரிய சட்டத்துக்கு ஏற்ப வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆணைகளின் ஏற்பாடுகளுக்கமைய மானியம் பெறும் காணியொன்று இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி கையெழுத்திட முடியாது.

இதற்கேற்ப அனுமதிப் பத்திரத்தில் செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு பயிர்ச்செய்கையை பூரணமாகச் செய்வதற்குத் தேவையான காலத்தை வழங்கி இறப்பர் மீள்பயிரீட்டு மானியங்கள் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றாதவாறு, வெற்றிகரமாக இறப்பர் பயிர்ச்செய்கையை பேணிச் செல்ல தவறும் (மானியங்களைப் பெற்றுக்கொண்ட) காணி உரிமையாளர்களுக்கு, பெற்றுக்கொண்ட மானியத்தை மீளச்செலுத்துமாறு அறிவிக்கப்படும். அவ்வாறு செலுத்தாத காணி உரிமையாளர்கள் மீது இறுதி நடவடிக்கையாக வழக்குத் தொடரப்படும்.

**தோல்விகரமான பயிர்ச்செய்கை அறவீடுகள் - 2015ம் ஆண்டு**

| மாவட்டம்டி | ஆறவிடப்பட்ட பயிர்ச்செய்கையாளர் எண்ணிக்கை | இறுதி அறிவித்தல் விடுத்து அறவிட்ட பணம்: ரூ.* | வழக்குத் தொடரப்பட்டு அறவிட்ட பணம்: ரூ.* |
|---|---|---|---|
| காலி | 05 | 63538.00 | |
| மாத்தறை | 03 | 4335.00 | |
| அம்பாந்தோட்டை | 03 | 61330.02 | |
| கேகாலை | 21 | 176212.39 | 90284.50 |
| கொழும்பு | 02 | 28250.00 | |
| இரத்தினபுரி | 06 | 12544.93 | |
| களுத்துறை | 50 | 203855.73 | |
| **மொத்தம்** | **90** | **550066.07** | **90284.50** |

**புள்ளிவிபர அட்டவணை xxix**

மேலும் காலநிலை மற்றும் ஏனைய நியாயமான காரணிகளின் அடிப்படையில் பயிர்ச்செய்கைகள் தோல்வியடைந்த பயிர்ச்செய்கையாளர் தொடர்பில் சட்டத்தில் ஒதுக்கங்களை செயற்படுத்தி மீண்டும் பயிர்ச்செய்கை ஆலோசனை சபையின் அனுமதியைப் பெற்று மானியத் தொகையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.17. விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.17.1 அம்பாறை மாவட்டத்தின் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்கல்.

2012 வரவுசெலவுத் திட்ட பிரேரணைக்கு ஏற்ப அம்பாறை, மாவட்டத்தின் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதறகு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப, 10,000 ஹெக்டயார் அளவில் இறப்பர் பயிரிட இலக்கு உள்ளது. இங்கு ஆரம்ப நடவடிக்கையாக 2012ம் ஆண்டில் 550 ஹெக்டயார் நிலத்தில் இறப்பர் பயிர்ச் செய்கை இலக்காகக் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் 137.5 ஹெக்டயார் நிலத்தில் இறப்பர் பயிரிடப்பட்டது. மஹஓய, பதியதலாவ, உஹன ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளி 3க்கும் பகிர்ந்து செல்லுமாறு இறப்பர் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டம் விரிவடைந்து வருகிறது.

அதன் இரண்டாம் கட்டமாக 2013ம் அண்டில் 402.93 ஹெக்டயார் பயிரிடப்பட்டது. அதன் மூன்றாவது நடவடிக்கையாக 2014ம் ஆண்டில், 256.17 ஹெக்டயாரில் பயிரிடப்பட்டது. அவ்வாறே 2015ம் ஆண்டில் காணப்பட்ட பயிர்ச்செய்கை இலக்காக 3450 ஹெக்டயார் காணப்பட்டதோடு, பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு 400.29 ஆக இருந்தது. அதற்கேற்ப இதுவரை 1196.89 ஹெக்டயார் பயிரிடப்பட்டுள்ளது.

## 3.18. ஒன்றிணைந்த நிதியம்

| செலவுகள் | கிடைக்கப்பெற்ற மொத்த ஒதுக்கங்கள் ரூ. | தேறிய செலவு ரூ. |
|---|---|---|
| **மீளும் செலவுகள்** | | |
| சம்பளமும் கூலியும் | 211,200,000.00 | 199,641,924.76 |
| பிரயாணச் செலவுகள் | 10,210,000.00 | 10,034,374.62 |
| வழங்கல்கள் | 4,900,000.00 | 4,636,461.72 |
| பராமரிப்புச் செலவுகள் | 6,500,000.00 | 5,582,473.88 |
| ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவைகள் | 28,700,000.00 | 26,636,811.17 |
| எரிபொருள் | 4,000,000.00 | 3,693,420.23 |
| சந்தாப் பண பங்களிப்புகள் | 4,090,000.00 | 1,170,648.64 |
| சொத்துகள் மீதான கடன் வட்டி | 2,000,000.00 | 1,656,443.78 |
| உறுதிப்படுத்தப்பட்ட மானிய விலை | 2,317,750,000.00 | 2,049,406,988.69 |
| **மொத்தம்** | **2,589,350,000.00** | **2.302,459,547.49** |
| **மூலதனச் செலவுகள்** | | |
| மூலதனச் சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் | 28,000,000.00 | 21,610,925.28 |
| மூலதனச் சொத்துகள் கைப்பற்றல் | 3,000,000.00 | 1,612,896.01 |
| அபிவிருத்தி உதவிகள் | 1,000,000,000.00 | 821,326,579.84 |
| திறன் விருத்தி | 1,000,000. 00 | 854,490.00 |
| ஏனைய முதலீடுகள் | 70,000,000.00 | 46,700,052.35 |
| **மொத்தம்** | **1,102,000,000.00** | **892,104,943.48** |
| **முழு மொத்தம்** | **3,691,350,000.00** | **3,194,564,490.97** |

**புள்ளிவிபர அட்டவணை xxx**

## 3.19. செஸ் தீர்வைகளைப் பெறலும் அவற்றை அறவிடும் விதமும்

இப்பர் சார்ந்த முடிவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுவோரின் அப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தேசிய ரீதியில் கொள்வனவு செய்யும் இறப்பர் மூலப்பொருளுக்கு செஸ் வரி அறவிடப்படும்.

2007 01ம் இலக்க செஸ் தீர்வை ஆணைகளுக்கு ஏற்ப இறப்பர் மூலப்பொருள் 1 கி.கிராமிற்கு ரூ.4/- வீதம் செஸ் தீர்வை அறவிடப்படும். அத் தீர்வை 'பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்' என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலை ஊடாக செலுத்தப்படும். அத்துடன் உரிய மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் மூலப்பொருள் அளவு காட்டப்படும் மாதாந்த கொள்வன அறிக்கை (Rcess 4A) உரிய தொழில் செய்வேரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

(1) பதிவு

| | |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 156 |
| செலுத்த வேண்டிய மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | 56 |
| செஸ் தீர்வை செலுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை | 51 |

**உள்நாட்டு பாவனைக்கு ஏற்ப அறவிடப்பட்ட செஸ் வரி**

| உரிய மாதம் | வருமானம் (உள்நாட்டு பாவனைக்கு ஏற்ப) ரூ. மில்லியன் |
|---|---|
| ஜனவரி | 13.88 |
| பெப்ரவரி | 8.92 |
| மார்ச் | 12.63 |
| ஏப்ரல் | 7.71 |
| மே | 16.78 |
| ஜூன் | 8.39 |
| ஜூலை | 17.92 |
| ஆகஸ்ட் | 21.72 |
| செப்டெம்பர் | 9.84 |
| ஒக்டோபர் | 15.99 |
| நவம்பர் | 17.25 |
| டிசம்பர் | 18.33 |
| **மொத்தம்** | 169.36 |

**செஸ் தீர்வை புள்ளிவிபர அட்டவணை -xxxi**

இறப்பர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் அடிப்படையில் அறவிடப்பட்ட செஸ் வரி பற்றிய விபரம் இவ்வாறு அமையும்.

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் அடிப்படையில் அறவிட்ட செஸ் வரி – 2015**

| உரிய மாதம் | இறக்குமதியின் அடிப்படையில் ரூ.மில்லியன் | ஏற்றுமதியின் அடிப்படையில் ரூ.மில்லியன் |
|---|---|---|
| ஜனவரி | 167.90 | 17.10 |
| பெப்ரவரி | 154.50 | 17.30 |
| மார்ச் | 139.50 | 19.00 |
| ஏப்ரல் | 161.50 | 18.40 |
| மே | 151.50 | 18.10 |
| ஜூன் | 204.40 | 16.10 |
| ஜூலை | 209.20 | 12.40 |
| ஆகஸ்ட் | 217.10 | 10.10 |
| செப்டெம்பர் | 199.60 | 12.80 |
| ஒக்டோபர் | 203.00 | 10.80 |
| நவம்பர் | 214.90 | 10.90 |
| டிசம்பர் | 233.10 | 9.60 |
| **மொத்தம்** | **2256.20** | **172.60** |
| | | |

**செஸ் தீர்வை புள்ளிவிபர அட்டவணை -xxxii**

## 3.20.மீள்பயிரீட்டு ஆலோசனைச் சபை

1953 36ம் இலக்க இறப்பர் மீள்பயிரீட்டு மானியங்கள் சட்டத்தின் 10வது வாசகத்தின் மற்றும் 1956 11ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 40 மற்றும் 41ம் வாசகங்களுக்கு ஏற்ப இச் சபை தாபிக்கப்பட்டுள்ளது.

இச் சபை, இறப்பர் மீள்பயிரீட்டு மானியங்கள் சட்டம் தொடர்பில் தோன்றும் விடயங்கள் பற்றி கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இறப்பர் மீள்பயிரீட்டு மானிய முறையை நிருவகிப்பதற்கான ஆலோசனைகளை பணிப்பாளர் நாயகத்துக்கு வழங்குகின்றது.

இதன் தலைவர் உத்தியோகபூர்வமாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாவார். எஞ்சிய உறுப்பினர்கள் கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சரால் நியமிக்கப்படுவர்.

## 3.21. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

- உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை – கேகாலை பிராந்திய அலுவலகம்
- களஞ்சியப் பொருட்களை வெளியிடல் மற்றும் கிடைப்பனவுகளை ஆவணப்படுத்தல் - (2014ம் ஆண்டு) – கொழும்பு பிரதான காரியாலயம்
- பிரதான காரியாலயத்தின் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் வங்கிகளை ஒப்பிட்டுப் பரிசோதித்தல் (2014 ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை)
- கொள்வனவுகளைப் பரீட்சித்தல் - கொழும்பு பிரதான காரியாலயம் (2014 செப்டெம்பர் முதல் டிசம்பர் வரை)
- பிரதான காரியாலயத்தின் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் நாளாந்த வாகன ஓட்டக் குறிப்புகளை பரீட்சித்தல் (2014 நவம்பர் முதல் 2015 பெப்ரவரி வரை)
- ‘இடைக்கால வரவுசெலவுத் திட்டம் பிரேரித்த இறப்பர் மானியப் பணம் கிடைத்தது’ என்பது பற்றி 2015.05.18ம் திகதி திவயின செய்தித் தாளில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் பரீட்சித்துப் பார்த்தல்
- திரு. எச்.டபிள்யு.சீ.கே. கருணாரத்ன அவர்களுக்குரிய ரூ.526.050.00 பணத்தை செலுத்துவதில் தாமதம் செய்தமை தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனை
- உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை - இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்
- உள்ளகக் கணக்காய்வு இரண்டாவது காலாண்டு அறிக்கை – 2015ம் ஆண்டு
- இயற்கையான இறப்பர் மூலப்பொருளுக்கான உறுதிப்படுத்தப்பட்ட விலையைக் செலுத்தும் செயற்பாடு தொடர்பில் விசேட பரிசோதனை 2015.0.23, 24, 25, 26ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.
- கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளை பரீட்சித்தல் - பிரதான காரியாலயம் (2015 ஜனவரிமுதல் 2015 ஜூன் வரை)
- செஸ் தீர்வை சேகரிப்பை பரிசோதித்தல்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை - இசுறு டிரேடர்ஸ் வர்த்தக நிறுவனம்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை – பல்லபான வர்த்தக நிறுவனம்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை – ஷெல்ட்டன் இறப்பர் ஸ்டோர்ஸ் வர்த்தக நிறுவனம்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை – திரு. ரீ.பீ. மனம்பேரி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை – கேகாலை பிராந்திய அலுவலகம்
- விசேட கணக்காய்வுப் பரிசோதனை – திரு.எம் வேரகல அவர்கள் RPS/01/34/36 மற்றும்RPS/01/34/656
- உள்ளகக் கணக்காய்வு மூன்றாவது காலாண்டு அறிக்கை – 2015ம் ஆண்டு

## 3.22. பிரச்சார பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

**பயிற்சி நிகழ்ச்சிகள்**

- தொழிற்துறை மட்டத்தில் 13 அறுவடை உதவிப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டமை
- 154 பொதுவான அறுவடை உதவிப் பயிற்சி நிகழச்சிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை
- கிளைகளைப் பொருத்துபவர்களுக்கான 09 நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தின் நாற்றுமேடைகளை அண்மித்து நடத்தப்பட்டமை
- இறப்பர் பயிர்ச்செய்கை மேம்படுத்தும் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் பதியதலாவையில் நடத்தப்பட்டமை.
- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து இறப்பர் செய்கையாளர்களை அறிவூட்டும் 64 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கீழ்வருமாறு அந் நிகழ்ச்சித்திட்டங்களை வேறுபடுத்திக் காட்ட முடியும்.

i. திவியட்ட அருணலு நிகழ்ச்சித் திட்டங்கள் 26

ii. இறப்பர் சார்ந்த முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் 13

iii. இறப்பர் செய்கைத் தொழில் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சிகள் 10

iv. போதைப் பொருள் நிவாரணம் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் 15

- துருசவிய நிதியத்துடன் இணைந்து இறப்பர் விவசாயிகளை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் 02 நடத்தப்பட்டன.

**கண்காட்சி நடவடிக்கைகள்**

| கண்காட்சி நடத்தப்பட்ட திகதிகள் | கண்காட்சிகள் நடத்தப்பட்ட இடங்கள் |
|---|---|
| 2015.03.18 – 2015.03.22 | களுத்துறை மாவட்டத்தின் வலகெதர மகாவித்தியாலயம் |
| 2015.07.28 – 2015.08.22 | காலி மாவட்டத்தின் லபுதூவ அரச விவசாயப் பண்ணை |
| 2015.09.30 – 2015.10.04 | கொழும்பு மாவட்டத்தின் பன்னிபிட்டிய தர்மபால மகாவித்தியாலயம் |
| 2015.10.13 – 2015.10.17 | குருணாகல் மாவட்டத்தின் மலியதேவ முன்னோடி வித்தியாலயம் |
| 2015.12.26 – 2015.12.31 | காலி மாவட்ட சமனல விளையாட்டரங்கு |

- பச்சைப் இறப்பர் பால் மற்றும் சீட் இறப்பருக்கான உறுதிப்படுத்தப்பட்ட விலையை செலுத்துவது தொடர்பில் கீழ்க்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

i. தேசிய தொலைக்காட்சி ஊடாக ஒரு மணிநேர நேரடி நிகழ்ச்சியொன்று ஒளிபரப்பப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

ii. செய்தித் தாள்கள் சில செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிட்டமை

iii. 7500 சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டமை

iv. 15000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டமை.

- இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியொன்றை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (புதிய இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 21 நாட்களும் பழைய இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 05 நாட்களும் என்ற ரீதியில்)

- காலி பிராந்திய அலுவலகத்திலும் பிரதான காரியாலயத்திலும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒரு நாள் பயிற்சி நிகழ்வொன் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட நடவடிக்கை எடுத்தல்.

## 3.23. கணினிப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும் பணிகள்

- இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்காக இறப்பர் தகவல்கள் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்வதற்காக செயற்படும் RIMS (Rubber Information Management System) திட்டத்தின் மென்பொருள் அபிவிருத்திக்கான கொள்முதல், ஆலோசனைச் சேவைகளை கொள்முதல் செயற்பாடுகளைப் பின்பற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட Price Water House Coopers Lanka தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தல்.

- திணைக்களத்தின் பிரதான காரியாலயத்துக்காகவும் பிராந்திய அலுவலகங்களுக்காகவும் கணினிகள், அச்சு இயந்திரங்கள் மற்றும் UPS உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தல்.

- திணைக்களத்தை புதிய சூழலுக்குக் கொண்டுவந்த பின்னர் மீண்டும் வலையமைத்தல் மேற்கொள்ளப்பட்டு இணையத்தள தொடர்புகளுக்காக LGN தொடர்புகளை மீளநிறுவுதல்.

- பிராந்திய அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு (கணினிப் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள) தேவைக்கேற்ப பயிற்சியை வழங்கி மானியங்களை வழங்கும் கணினிச் செயற்பாட்டினை பயனுள்ளவாறு தொடர்ச்சியாக நடத்திச் செல்லல்.

# 4. பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்றம்.

நாட்டின் இறப்பர் செய்கை பண்ணும் 14 மாவட்டங்களில் சேவை வழங்குவதற்காக 5 பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2015ம் ஆண்டில் அவ் அலுவலகங்கள் அடைந்த முன்னேற்றம் கீழ்வருமாறு.

## 4.1 புதிய இறப்பர் பயிர்ச்செய்கை முன்னேற்றம்




அம்பாறை மாவட்டத்தின் பயிர்ச்செய்கை இலக்கு 3000 ஹெக்டெயார்கள் ஆகும். வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினதும் மகாவலி காணிகளினதும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் போனதால் வழங்கப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை.

## 4.2. இறப்பர் மீள்பயிரீட்டின் முன்னேற்றம்



## 4.3. ஊடுபயிர்ச் செய்கை முன்னேற்றம்




## 4.4. மழைக் கவசமிடல்



## 4.5. பால் வெட்டுபவர்களைப் பயிற்றுவித்தல்




## 4.6. பால் வெட்டுபவர்களுக்கான தொழிற்பயிற்சி நிகழ்வு



## 4.7. கிளை பொருத்துனர்களுக்கான பயிற்சி நிகழ்வு








பிராந்திய அலுவலகங்கள் ஊடாக பயிற்சி நிகழ்வுகளை நடத்துதல்.

## 5. ஏனைய நிறுவனங்களின் சேவைகளை நிறைவேற்றல்

கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கு ஏற்ப ஆண்டுக்குள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாள் சபை உறுப்புரிமையை வகித்து அளிக்கப்படும் கடமைகளை நிறைவேற்றல்.

1) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்

2) துருசவிய நிதியம்

3) இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்

4) தோட்டக் காணிகள் துண்டாடப்படுவதை கட்டுப்படுத்தும் சபை

பணிப்பாளர் சபை கூட்ட அமர்வுகளில் கலந்து கொள்ளல், கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல், தீர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், தேவையான இணக்கங்கள் மற்றும் அனுமதிகளை வழங்கல், நடவடிக்கைகளை விசாரித்தல், குறிப்பிட்ட நிறுவனங்களின் செயற்படும் வேலைத்திட்டங்களுக்கு பங்களிப்பை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டது.

இது தவிர, திணைக்களத்தின் சேவைகள் தேவைப்படும் அனைத்து அமைச்சுத் திணைக்களங்கள் ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவன நபர்களுக்கு அவர்கள் கோருகின்றன சேவைகள் தகவல்கள் மற்றும் ஒத்துழைப்புகள் குறைவின்றி வழங்கப்பட்டன. பாடசாலைக் கண்காட்சி ஒத்துழைப்பு விரிவுரை மற்றும் தகவல் ஒத்துழைப்பு. நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் தேவையான புள்ளிவிபரங்கள் மற்றும் தெளிபடுத்தல்கள், வினைத்திறன்மிக்க ஆலோசனைகள் என்பவற்றை வழங்குதல் என்பன இவற்றிடையே அடங்கும்.

இச் சேவைகள் மற்றும் தகவல்களை வழங்குதல் பிரதான காரியாலயத்தின் பிராந்திய அலுவலகங்களின் மற்றும் களநிலை உத்தியோகத்தர்களினதும் நாற்றுமேடை முகாமையாளர்களினதும் உதவியுடன் இடம்பெற்றது.

මගේ අංකය
எனது இல. } பீஎல்ஏ/சீ/ஆர்ஆர்எஸ்எப்/ 06/15/01
My No.

මබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2016 செப்தெம்பர் 09
Date

பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 36 ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதிய அதிகாரச்சட்டத்தின் (437 ஆவது அதிகாரம்) 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதியத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் முதலீடுகள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையினாலும் ஏனைய வருமானமொன்றும் உழைக்கப்படாதிருந்தமையாலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன்

வருமானச் செலவினக் கூற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டின் போது திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 70,659,526 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை

#### (அ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்

நிதியம் செயற்படு நிலையில் காணப்படாமையினால் 2014 யூலை 04 ஆந் திகதிய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் படி நிதியத்தின் மீதிகளைத் தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. கையளிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் சொத்துக்கள் தொடர்பான பதிவேடொன்று காணப்படாதிருந்ததுடன் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் அந்த சொத்துக்கள் கையேற்கப்பட்டமைக்கான எவ்வித எழுத்து மூல ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்ட கிரயம் ரூபா 63,438,232 கிரயத்திலான சொத்துக்கள் சரியாக கையளிக்கப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

#### (ஆ) நடைமுறைச் சொத்துக்கள்

(i) பல்வேறு விடயங்களுக்காக வழங்கப்பட்டு 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தொடர்ச்சியாக மாற்றமுராது காணப்படுகின்ற ரூபா 15,220,514 கூட்டுத்தொகையான 12 முற்பணக் கணக்கு மீதிகள் தொடர்பாக போதியளவான

தகவல்கள் மற்றும் அவை அறவிடவேண்டிய தரப்பினர்களின் விபரங்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) பொதுத் திறைசேரியிலிருந்தும் சுங்கத் திணைக்களத்திடமிருந்தும் கிடைக்கவேண்டிய ரூபா 17,353,015 கூட்டுத்தொகை உரிய நிறுவனங்களிடம் விசாரணை செய்யப்படாமல் 18 வருடங்களாக நடைமுறைச் சொத்தாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகள் உள்ளபடியாக கிடைக்க வேண்டிய மீதியா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 18 வருடகாலமாக கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 102,890 தொகையான பெறவேண்டிய முதலீட்டு வட்டி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தொகுதி தயாரிக்கும் நிலையத்திற்கான பெறுவனவுகள் மற்றும் செயற்திட்ட இலக்கம் 02 என்ற இரண்டு கணக்குகளுக்குரிய முறையே ரூபா 3,647,219 மற்றும் ரூபா 65,477,579 தொகையான மீதிகள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்ப்பட்டிருக்கவில்லை.

(v) சொத்தொன்றாக இனங்காண்பதற்கு காரணங்கள் தெளிவில்லாததும், அறவிடல் முழுமையாக நிச்சயமில்லாததுமான ரூபா 351,353 கூட்டுத்தொகையான 5 கணக்கு மீதிகள் 18 வருட காலமாக நடைமுறைச் சொத்தாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**(இ) நடைமுறைப் பொறுப்புக்கள்**

(i) 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 9,988,530 தொகையான நானாவித வைப்புக்களுக்குரிய பதிவேடுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறவேண்டிய தரப்பினர் தொடர்பான தகவல்கள் எதுவும் காணப்படாத 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் மீதியாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 57,526 தொகையான வைத்திய உதவிக் கடன் மற்றும் ஏனைய திணைக்களத்தின் கடன் ரூபா 416,313 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரே முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்ட போதிலும், இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 281,210 தொகை மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 15,449 தொகையைச் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செலுத்த வேண்டிய உரிய தரப்பினர் மற்றும் பெறுமதி என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும், ரூபா 22,087 தொகையான இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்திற்கு செலுத்தித் தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 18 வருடங்களுக்கு முன்னிருந்து எந்த ஊழியரும் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்த போதிலும் செலுத்த வேண்டிய உரிய தரப்பினர் குறிப்பிடப்படாத ரூபா 90,706 தொகையான ஊழியர் பணிக்கொடை கடப்பாடொன்று நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) நாற்று முற்பணம் மற்றும் முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு பசளை வழங்குவதற்காக பெயரிடப்பட்ட, முறையே ரூபா 119,550 தொகை மற்றும் ரூபா 4,779,564 தொகையான இரண்டு மீதிகள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பதிவேடு எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நிதியத்திற்கு உரித்தல்லாத கடன் பெறுவனவுகளுக்காக குறிப்படப்பட்ட ரூபா 3,096,701 தொகை நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அசாதாரண கடப்பாடு ஏற்பட்டமைக்கான காரணம் அல்லது

அப்பணம் செலுத்த வேண்டிய தரப்பினர் யார் என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

#### 3.1.1 நிதி விளைவுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குரிய சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வருமானமொன்று கிடைத்திருந்ததுடன் அது நிதியத்தின் ஒரே வருமான மூலமாக இருந்தது. முன்னைய ஆண்டின் ஆரம்பத்தின் போது நிதியத்திற்குரிய சகல வங்கி வைப்புக்களும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் நிதியம் செயற்பாட்டு நிலையில் காணப்படாமையினால் வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சரவைக் குறிப்பொன்று 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 17 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, சட்டவரைவு வழங்கல் தொடர்புபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய/ செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

ஒப்பம் :- எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. — பீஎல்ஏ/சீ/ஆர்சீஎப்/06/15/01 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | දිනය<br>திகதி<br>Date — 2016 செப்தெம்பர் 09 |

பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அதிகாரம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதியத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் முதலீடுகள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையினாலும் ஏனைய வருமானமொன்றும் உழைக்கப்படாதிருந்தமையாலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வருமானச் செலவினக் கூற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 635,271 கூட்டுத்தொகையான 13 நடைமுறைச் சொத்துக்களின் மீதிகள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 287,378 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 239,784 கூட்டுத்தொகையான 05 நடைமுறைப் பொறுப்பு விடயங்களின் மீதிகள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 222,031 தொகையான செலுத்த வேண்டிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | பட்டோலை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை, நிலையான சொத்துப் பதிவேடு |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,271 | பட்டோலை, காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஏடுகள் |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் புத்தகங்கள் பதிவேடுகள் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குரிய நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்காக கிடைத்த வட்டி வருமானம் நிதியத்தின் ஒரே வருமான மூலமாக இருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 10,456,639 தொகையான 02 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,435,797 தொகையான சேமிப்பு வைப்புக்களுக்கு கிடைக்கவேண்டிய வட்டி ரூபா 12,957 தொகை கலைத்தல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு கலைத்தல் கணக்கில் ரூபா 13,905,393 தொகையான வரவு மீதி மீளாய்வாண்டின் போது இறப்பர் கட்டுப்பாட்டு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் அந்தக் கணக்கின் மீதி அந்த அளவினால் குறைவடைந்திருந்தது. மேலும் நிதியத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் காணப்படாமையினால் மீளாய்வாண்டில் வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சரவைக் குறிப்பொன்று 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 17 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, சட்டவரைவு வழங்கல் தொடர்புபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் செயற்படு நிலைமையொன்று காணப்படாமையினால் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய/ செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

ஒப்பம் :- எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி